மாதஇ • 60 பைசா

ஏப்'86


# 'கேமரா'வைப் பார்த்த சந்தோஷம் தவிர கண்களின் சிரிப்புக்குக் காரணம் உண்டா?



62

FREE E - BOOKS , www.thamizham.net.,

# புதிய விற்பனை சந்தை



திரைப்படத் துறையினர் பலரை மிரள வைத்திருக்கிறது வீடியோ. பாரதிராஜா, பாக்யராஜ் போன்ற இயக்குனர்கள் வீடியோ மீது வெறுப்பை உமிழ்கிறார்கள். முன்பு சென்சார் போர்டை இப்படி கண்டித்தனர்கள்; திட்டியவர்கள்; தரக்குறைவாகப் பேசியவர்கள் இவர்கள். இவர்களின் தாக்குதல் கணைகள் வீடியோ வியாபாரிகள் மீது விழுந்திருக்கிறது. தொலைக்காட்சிகள் பெருகிய போது, திரையரங்குகளில் கூட்டம் குறையவில்லை. அப்போது தயாரிப்பாளர்களும், விநியோகஸ்தர்களும் அஞ்சவில்லை. ஆனால் வீடியோவால் வசூல், நகர்ப்புரங்களில் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளது. ஒருமுறை, படம் வெளிவரும் முன்னமே விமர்சனங்கள் வந்துவிட்டனவாம். எல்லாம் வீடியோவின் கைங்கர்யம்.

வீடியோ சமூகத்தைச் சீரழித்து வருகிறது. அதற்காய் இவர்கள் வருந்தவில்லை. 'தம் பிழைப்பில் மண் விழுகிறதே' என்று தான் டைரக்டர்கள் கவலைப் படுகிறார்கள். இந்த இயக்குநர்களுக்கெல்லாம் ஆசானே வீடியோதான். வெளி நாட்டிலிருந்து பல திரைப்பட டெக்னிக்குகளை வீடியோ மூலம்தானே ரகசியமாகத் திருடுகிறார்கள்.

– ஸ·ஜெ· சூர்யா

FREE E - BOOKS , www.thamizham.net.,




FREE E - BOOKS , www.thamizham.net.,

# தமிழ் நாட்டு எம்.பி.க்கள்
## டெல்லியில் என்ன செய்கிறார்கள்

39 தமிழ்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தலைநகர் டில்லியில் உள்ளனர். இந்திரா காங்கிரஸ் 25; அ.தி.மு.க. 12, தி.மு.க. 2. அ.தி.மு.க. எம்.பிக்களின் 12 பேரின் சராசரி வயது 38 தான். இதில் 12 பேர் கிராமிய பின்னணியுடையவர்கள்; இளம் வயது முதல் எம்.ஜி.ஆர் ரசிகர்களாக இருந்தவர்கள்; பெரும்பாலானவர்கள் சிறு வணிகர்கள் அல்லது முன்னாள் கிளார்க்குகள்; படித்த வகுப்பினர்.

2000 மைல்களைக் கடந்தும் 'தலைவர்' எம்.ஜி.ஆரின் பயபக்தி இவர்களை ஆட்டுவிக்கிறது. தலைவர் முகம் கோணாமலிருக்க எதையும் செய்யக் காத்திருக்கிறார்கள். டில்லி வழியாக தலைவர் டோக்கியோ சென்றபோது அந்த விடியற்காலை பொழுதிலும் டில்லி விமான நிலையத்தில் அத்தனை அ.தி.மு.க. எம்.பிக்களும் அணிவகுத்து நின்று தங்கள் விசுவாசத்தைக் காட்டினார்கள். டில்லி வீதியில் எங்கு சென்றாலும் கறுப்பு, சிவப்பு கரை போட்ட வெள்ளை வேட்டியும், வலது கையில் கழகக்கொடி நெய்யப்பட்ட வெள்ளைச் சட்டையும் அணிந்தே செல்கிறார்கள்.

டில்லி தமிழ்நாடு இல்லத்தில் தங்கியிருக்கும் ஒரு எம்.பி. எம்.ஜி.ஆர் பட்டப்பாடல்களை மெனக்கெட்டு தன் ஊரிலிருந்து எடுத்து வந்து போட்டுக் கொண்டிருப்பாராம்.

FREE E - BOOKS , www.thamizham.net.,



பாராளுமன்ற கூட்டத் தொடர் நடக்கும் போது 12 அ.தி.மு.க. உறுப்பினர்களில் 4 பேர் மட்டுமே தீவிரமாக பங்கு கொண்டனர்கள். இ. காங்கிரஸ் பங்கேற்பு இன்னும் மோசம். 25 பேர்களில் கூட்டத்திற்கு வருவதே குறைவுதான். காங்கிரஸ் எம்.பி.க்கள் பெரும்பாலோர் முன்னாள் ஜமீன்தார்கள் அல்லது பெரும் பணக்காரர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. சராசரி வயது 48.

கடந்த மாதங்களில் ஒருமுறைகூட அ.தி.மு.க. எம்.பிக்கள் தங்கள் எதிர்ப்பைக் காட்டி வெளியேறியதில்லை. “அதற்கு அவசியமென்ன...? நாங்கள் காங்கிரசோடு தோழமையுடையவர்கள். இந்தமாதிரி நாடகங்களைப் போடாமலேயே, மாறுபட்ட கருத்துக்கள் இருக்கும்போது எங்கள் நிலையைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம்” என்கிறார் நாகை எம்.பி.யும் அ.தி.மு.க. கொறடாவுமான என். மகாலிங்கம்.

தி.மு.க. எம்.பி. கலாநிதி கொஞ்சம் மாறுபட்டவர். உருப்படியாக பேசுவதுடன் திட்டங்கள் நிறைவேற சிரமம் எடுத்துக் கொள்பவர் என்பதை மறுப்பதற்கில்லை. சென்னை நகர அதிவேக மின்வண்டி திட்டத்திற்கு 4.75 கோடி ஒப்புதலை வாங்கியது இதற்குச் சான்று.

பாராளுமன்றக் கூட்டத்தொடர் நடக்காத நேரங்களில் எம்.பி.களின் அரசுவீடுகளில் வாடகைதரும் பலர் தென்பட்டாலும் ‘சொந்தக்காரர்கள்’ ‘தெரிந்தவர்கள்’ என்று இவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

பெரும்பாலான எம்.பிக்கள் வடநாட்டுச் சப்பாத்தி சாப்பாட்டைப் பழக்கிக்கொள்ள விரும்பவில்லை. காலை முதல் இரவு 10வரை தென்னிந்திய சிற்றுண்டிகளை வைத்து சூடாக இட்லி, தோசை, வடை கிடைக்க எம்.பி. கேண்டீனில் வசதி செய்யப்பட்டிருக்கிறது.

ஒரு அதிமுக எம்.பியை கூட்டத்தொடர் முழுக்க நிருபர் பேட்டி கண்டு புகைப்படமெடுத்த பின்பு ஒரு நூறு ரூபாய் நோட்டை நீட்டி 'செலவுக்கு வைத்துக் கொள்ளுங்கள்' என்றார். என்ன அர்த்தம்? தனக்கு சாதகமாக எழுதவேண்டும் என்கிறாரா? இதுதான் அண்ணா வழியா?

'ப்ளைப் இந்தியா' இதழிலிருந்து : ரு.சு.

# பாராளுமன்றத்தில் தூக்கம்


தமிழக எம்.பி வைஜயந்திமாலாவுக்குப் பாராளுமன்ற நடவடிக்கை எதிலுமே மனம் லயிப்பதில்லை. பாராளுமன்ற நிகழ்வுகளில் கண்களை மூடிக்கொண்டு அமர்ந்திருப்பார். ரயில்வே பட்ஜெட், பொது பட்ஜெட் போன்ற முக்கிய நேரங்களில் அமைச்சர்களுக்கு அடுத்த வரிசையில் அமர்ந்திருந்தாலும் ஜோதிலோவென்று சாவகாசமாக இருந்தாராம்.



28-02-86 அன்று வி.பி.சிங் பட்ஜெட் சொற்பொழிவு நிகழ்த்திய போது வைஜயந்தி நன்கு தூங்கிக்கொண்டிருந்தார். இதைப்பார்த்த சில எம்.பிக்களும், நடிகர் அமிதாபச்சனும் தங்களுக்குள் ஜோக் அடித்துக் கிண்டல் செய்தார்களாம். தமிழக கவர்ச்சி எம்.பியின் லட்சணம் கப்பலேறுகிறது.

தகவல் : சண்டே.

அதிகபட்சம் ஒரு மனிதன் எத்தனை மொழிகள் பேசிவிட முடியும்? சொன்னால் ஆச்சரியப்படுவீர்கள். ரஷ்யாக்காரரான பெண்ட் நூர்பேக் 100 மொழிகள் பேசி அசர வைக்கிறார். ஆப்பிரிக்க, லத்தீன், அமெரிக்க, கீழ்த்திசை மொழிகளில் சரளமாகப் பேசுகிறார். எழுதுகிறார். தார்த்து பல்கலைக்கழகத்தில் இப்போது சீனம், ஆஃப்ரிக்கன், ஸ்வாஹிலி, அரபிக், எகிப்திய மொழிகளை மாணவர்களுக்கு கற்றுத் தருகிறார்.



சிறந்த உரங்களுக்கும்
பூச்சிக் கொள்ளி மருந்துகளுக்கும்
திறனுள்ள விதைகளுக்கும்

நல்ல விற்பனை ஸ்தாபனம்



**N. கருப்பண்ணன்**

ஏ. ஐ. டி. பாரி உர விற்பனையாளர்
கீழ வீதி, சுவாமிமலை - 612 302.
தஞ்சை மாவட்டம்.

● ● ●

உரிமையாளர்:
**N. கருப்பண்ணன்**
(பாபநாசம் ஊராட்சி ஒன்றியத் தலைவர்)
என்றும் தங்கள் நல்வரவை நாடுகிறோம்!

FREE E - BOOKS , www.thamizham.net.,



# நவீன ஓவியங்கள் பற்றி...

— சேகுணா

? மரபு ஓவியங்களிலிருந்து இன்றைய நவீன ஓவியங்கள் எந்த வகையில் வேறுபடுகின்றன...?

! மரபு ஓவியங்கள் அழகின்புறத்தை பிரதானமாகக் கொண்டவை. நவீன ஓவியங்கள் உணர்வுகளின் அப்பட்டமான வெளிப்பாட்டை முக்கியமாகக் கொண்டவை.

? நவீன ஓவியங்கள் மக்களுக்குப் புரிவதில்லையே - இது பற்றி...



! பல்வேறு உணர்வுகளின் வெளிப்பாடாய் நவீன ஓவியங்கள் அமைவதால் அவை அவ்வளவு எளிதாக மக்களைப் போய்ச் சேர்வதில்லை. மக்களுக்கு இது சம்பந்தமாக சில பார்வை அனுபவங்கள் (Visual experiance) வேண்டும்.

? கார்டூன்கள், ஓவியங்களா...?

! இது ஒருவகையான வரைகோட்டுத் திறன். கோடுகள் மூலமாக கிண்டல், நகைச்சுவை போன்ற அம்சங்களை வெளிப்படுத்த இவைகளால் முடிகிறது.

? இன்றைய வணிகநோக்குப் பத்திரிகைகளில் நவீன ஓவியங்கள் வருகிறதே...

! இப்பத்திரிகைகள் முறையான நவீன ஓவியங்களை தங்கள் பத்திரிகைகளில் வெளியிடுவதில்லை. அப்படி வெளியிட்டாலும் அதிலும் மீண்டும் வணிக நோக்கு வந்துவிடும்.

? நிர்வாண ஓவியங்கள்...

! சிற்பிகளாலும், ஓவியர்களாலும் நிர்வாண ஓவியங்கள் படைக்கப்படுகிறது. ரோடின் (Rodin) எனும் சிற்பி நிர்வாண சிலைகள் சிறந்தமுறையில்

FREE E - BOOKS , www.thamizham.net.,

உருவாக்குவதற்கு அருகில் பத்து பதினைந்து நபர்களை நிர்வாணமாக நிறுத்தி வைப்பாராம். நிர்வாணத்தின் ஒவ்வொரு அசைவையும் அவரது மனம் பதிவு செய்துகொண்டுவிடும். பெர்னாட்ஷாவின் உடலைத் தொட்டுவிட்டு இயேசுவின் உடல்போல் இருப்பதாகக் கூறியவர் இவரே!

? ஜெயராஜ் போன்ற பிரபலமான ஓவியர்கள் பற்றி...

! இவர்களைப் பற்றிச் சொல்லுவதற்கு என்ன இருக்கிறது? இவர்கள் வணிக ஓவியர்கள். அவ்வளவுதான்!

? கொலாஜ் ஓவியங்கள் குறித்து...

! அனிச்சை கவிதைகளைப் போல (convulsive poetry), கொலாஜ் ஓவியங்களும் சர்ரியலிஸ பாதிப்பால் எழுந்தவை (இருபதுகளில்)

? பிராய்டிசம் நவீன ஓவியர்களுக்கு எவ்வாறு உந்துதல் அளித்தது...?

! பாலுணர்வும், மரணபீதியும் மனிதனின் ஆழ்மனத்தை ஆக்கிரமித்துக் கொண்ட உணர்வுகளாக பிராய்டு கூறுகிறார். இவ்வுணர்வுகளின் வெளிப்பாடாய் சர்ரியலிச ஓவியங்கள் எழுந்தன. இதிலிருந்துதான் நவீன ஓவியங்கள் தன் ராஜநடையை தொடங்கின.

பேட்டி: செந்தில் - பிருந்தா.

## சுட்டி சந்தா

சுட்டி சந்தா: 12 இதழ்கள் அஞ்சலில் பெற ரூ 7.00 பணவிடை செய்யுங்கள்.

## சுட்டி முகவரி

எங்களைத் தொடர்புகொள்ளும்: "சுட்டி" 1494, அண்ணாநகர், சென்னை 600 040

## முன் இதழ்கள்

சுட்டி முன் இதழ்கள் எண்: 1 முதல் [illegible] பிற இதழ்கள் அனைத்தும் கிடைக்கும். ஒவ்வொரு இதழ் 0·75 காசு மற்றும் இதழுக்கு 45 காசு வீதம் அஞ்சல் தலை/பணவிடை அனுப்பினால் அஞ்சலில் உங்களுக்கு வந்து சேரும்.

## சுட்டி இலவசம்

சுட்டி இலவசம்: சுட்டியைக் கேள்விப் படாத, விரும்பி ஏற்கக் கூடிய நண்பர்களின் முகவரியை அனுப்புங்கள். அவர்களுக்கு உங்கள் சார்பில் ஒரு மாதிரி இதழ் இலவசமாக அனுப்புகிறோம். எவ்வளவு முகவரிகள் வேண்டுமானாலும் அஞ்சல் அட்டையில் எழுதி அனுப்பலாம்.


## சுட்டி வரவில்லை

சுட்டி ஒழுங்காக வந்து சேருவதில்லை என்று சில சந்தாதாரர்கள் மௌனமாகக் குறைபட்டுப் பயனில்லை. [illegible] முயற்சி எடுத்தும் சில சுட்டி இதழ்கள் அஞ்சலில் [illegible] தவிர்க்க முடியாதிருக்கிறது. சந்தா முடிவடைவதிலிருந்து 15 ஆம் தேதிக்குள் சுட்டி கிடைக்காவிட்டால் சந்தாதாரர்கள் சந்தா எண் குறிப்பிட்டு (மறுநாள், பெயர் முகவரி) எழுதினால் மீண்டும் ஒரு முறை அனுப்புகிறோம். வேறு வழியில்லை.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ஓசிப் படிப்பாளிகள்

வீட்டில் சாப்பாடு தயாராக இருந்தாலும் நண்பர்களோடு ஜாலியாக ஓட்டலில் சாப்பிட்டு, வரும் 15 ரூபாய் பில்லை, கேள்வி கேட்காமல் கேட்க பணமுண்டு; கொடுத்துக்கொள்ள வயிறுமுண்டு.



புது ரிலீஸ் படத்தை முட்டி மோதி உதைபட்டு கறுப்பில் டிக்கெட் வாங்கி பார்த்துக் களிக்க எந்தப் பணச்சிக்கலும் வருவதில்லை. பத்திரிகையா? சுலபம்! பக்கத்து வீட்டில் வாங்குகிறார்கள்; ஆபீசில் பத்திரிகைகளாம்; நூலகத்திற்கு வருகிறது... சொந்தமாக காசு கொடுத்து இதழ்களோ, நூல்களோ வாங்குவது வீண் செலவு; தேவையற்ற காரியம்.

ஓசியில் பத்திரிகை, புத்தகங்கள் படிப்பவர்கள் இயலாதவர்களாயின் மன்னிக்கலாம். மாதம் ரூ 10 கூட இதற்கெல்லாம் செலவழிக்க முடியாத சில ஜென்மங்கள் மாதம் ரூ 150/ அல்லது அதற்கு மேலும், தவறாமல் தண்டமாக புகையை வாங்குவதைப் பார்க்கலாம். "ஐயோ! பணமில்லையே" என்று எப்போதும் இந்த ஓசிப்பேர்வழிகளில் பலர், மசாலா பத்திரிகைகள் நாலைந்து கூட வாங்க யோசிப்பவர்கள் எனில், தரமான நூல்கள், பத்திரிகைகள் வாங்க நிர்பந்தித்தால் ஆயிரம் சாக்குப் போக்கு சொல்வார்கள். நூலகத்தில் படித்துக் கொள்கிறேன் என்பார்கள்.


ஜோதிட புத்தகங்களும், மட்டமான சினிமா பத்திரிகைகளும் தோரணமாக கடைகளெங்கும் தொங்கவும், சூடாக விற்கவும் இந்தப் பேர்வழிகளே காரணம். இதெல்லாம் ஓசியில் படிப்பதை விட.

FREE E - BOOKS , www.thamizham.net.,

எவ்வளவு விலையானாலும், ஆசையாய் தாங்களே வாங்கி சொந்தமாக்கிப் பாதுகாப்பார்கள் அவர்கள். தரமான நூல்களும், பத்திரிகைகளும் 1000 பிரதிகள் கூட தாண்ட முடியாமல் முடங்கிக்கிடப்பதற்கு ஓசி படிப்பாளிகளின் போக்கே முக்கிய காரணம். " கல்வியில் சிறந்த தமிழ் நாடு" என்ற வீண் ஜம்பத்திற்கு மட்டும் குறைச்சலில்லை. — அம்மணி

-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-

# ஆகாய விபத்துக்கள்- பூமியில் ஆரம்பம்




விமானிகள் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். அவர்கள் மது அருந்தி இருப்பதாகச் சந்தேகம் ஏற்பட்டால், ரத்த, சிறுநீர் பரிசோதனைக்கு உட்படுத்தப் படுவார்கள். இந்த நடைமுறையை ஏற்க வேண்டுமென்பது உத்தரவு. ஏற்காதவர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்

FREE E - BOOKS , www.thamizham.net.,

கப்பலும்.

ஆனால் நடப்பது என்ன?

கேப்டன் வி.கே. திக்கர் 'ட்யூட்டி'க்கு வருகிறார். மருத்துவர் ஜெய்ஸ்வால் அவரை சுவாசப் பரிசோதனைக்கு அழைக்கிறார். மாதம் வெறும் 1500 ரூபாய் ஊதியம் பெறும் டாக்டர் கூப்பிட்டால் ஒரு 'பைலட் ஆபீஸர்' ஓடி வர வேண்டுமா?

விமானி விமானத்திற்குச் செல்ல, மருத்துவர் மேலிடத்திற்குத் தெரிவிக்க, விமானி அதற்கும் மேலிடத்திற்கு தொலை பேசி விட்டு விமானத்தை எடுத்துக் கொண்டு பறந்து விடுகிறார். தரையில் இருக்கும் மருத்துவருக்குத் தன்மானப் பிரச்சனை. நிர்வாகத்திடம் கால் கடுதாசியை நீட்டி விட்டு பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுக்கிறார். அதை ஆமோதித்து சக மருத்துவர்களும் அறிக்கை விட அதில் ஒருவரை நிர்வாகமே நீக்கி விட இந்தச் சம்பவம் சரித்திரமாகி நிறைவடைகிறது.

ஆமாம், உத்திரவை மீறிய விமானி மீது நடவடிக்கை கிடையாதா? அவருக்கென்ன கொம்பா முளைத்திருக்கிறது?

ஆம்! இரண்டு கொம்புகள். தொழிற்சங்கம். பணம்.

அவர் இந்திய தொழில் முறை விமானிகள் சங்கத்தில் முக்கிய புள்ளி. டிவி. கம்பெனி ஒன்றின் உரிமையாளரான பெண்மணி ஒருவரின் கணவர். — கே. கண்ணன்

தமிழகமெங்கும் வீடுகள், வீட்டு மனைகள் வாங்க - விற்க தொடர்பு கொள்க: எம். வெங்கட், 24. திருவள்ளுவர் தெரு, இராமாபுரம், அம்பத்தூர், சென்னை - 600 053.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் கடிதங்கள்

இந்தியாவின் மக்கள் தொகையில் முக்கால்வாசிப் பேருக்குத் தங்கள் பெயரை அச்சில் பார்க்கிற வாய்ப்பு திருமண அழைப்பிதழில் மட்டுமே கிடைக்கிறது. ஒவ்வொரு மனிதனுக்கும் பிரபலம் பெறுவதில் ஒரு பெருமிதம் இருக்கிறது. இந்த ஆசையின் எளிய வடிவம்தான் வாசகர் கடிதங்கள்.

பெரும்பாலான ஜனரஞ்சகப் பத்திரிகைகளில் வெளிவரும் வாசகர் கடிதங்களை கவனித்தால் அவை ஒரு குறிப்பிட்ட இருபது பேரால் மட்டுமே எழுதப்படுகிறது என்பதை அறியலாம். தங்கள் கடிதங்கள் பிரசுரமாக வேண்டும் என்பதற்காக இவர்கள் எந்தக் கீழ்க்கு வழியையும் பின்பற்றத் தயங்குவதில்லை. தஞ்சாவூரில் இருக்கிற வாசகர் சென்னையின் சீரழிந்த தமிழ் எழுதுவதில் இருந்து 'எழுத்தாளர் இன் நாவல் சிலுக்கு டான்ஸைப் போல் கிளுகிளுப்பாக இருந்தது' என்கிற ரீதியான விமர்சனம் வரை இவர்கள் எழுத்தைத் துணிந்து கொச்சைப்படுத்துகிறார்கள்.

பத்திரிகையைப் படிக்காமலேயே வாசகர் கடிதம் எழுதுபவர்களும் உண்டு. 'நேர் விமர்சனம்' பத்திரிகையில் அட்டையில் பெரியார் திடல் பற்றிய செய்தியின் தலைப்பை வெளியிட்டு விட்டு பத்திரிகையின் உள்ளே செய்தி வரவில்லை. அந்த இதழுக்கு வந்த வாசகர் கடிதத்தில் அந்தச் செய்தியை பாராட்டிக் கடிதம்

FREE E - BOOKS , www.thamizham.net.,

வந்திருந்தது.

ஒரே வாசகர் குமுதம், மனஓசை, கணையாழி, சினிமா மெயில், ஞானபூமி... இப்படி வெவ்வேறு தரம், கண்ணோட்டம் உடைய எல்லா பத்திரிகைகளையும் பாராட்டி (குமுதத்தை மட்டும் திட்டி) கடிதம் எழுதுகிறார். சென்னைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் டாக்டர் சஞ்சீவி தான் எழுதி வெளியான வாசகர் கடிதங்களை கத்தரித்து அறிவிப்புப் பலகையில் ஒட்டி வைப்பாராம்.

தமிழுக்கு நேர்ந்திருக்கும் மாபெரும் அவலம் என்னவெனில் இந்தக் கும்பல் இப்போது புதுக்கவிதையை நோக்கி படையெடுக்கத் தொடங்கியிருக்கிறது.

• பிருந்தா சாரதி.

## எமக்கு வந்தவை...

தமிழ்த் தேசியமும் சமுதாயக் கொந்தளிப்பும் — கலாநிதி கா. சிவத்தம்பி — ஈழம், P.O. Box No. 2356, சென்னை-24 விலை : குறிப்பிடப்படவில்லை.

ஒரு சொட்டுக் கண்ணீர் — மரபுக்கவிதைகள் (6-00) ப. எழில்வாணன் — தமிழ்வாணன் பதிப்பகம், 11.அ, கோயில் தெரு, பள்ளப்பட்டி - 639 205, திருச்சி மாவட்டம்

பாலபாரதி — கட்டுரைகள் (8-00) — சக்தி சீனிவாசன் — M/S அல்லயன்ஸ் கம்பெனி, த.பெ.எண் : 617, மயிலை, சென்னை-4.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# வாசகர் எதிரொலி

அடுத்த நூற்றாண்டில் வாழ்க்கை எப்படி இருக்கும்? கட்டுரை பிரதம மந்திரி ராஜீவ் அவர்களால் எழுதப்பட்டதா?

சிவமணி, பொள்ளாச்சி-2.

சுபாச்சாரி சாமியாரின் கதை கட்டுரையைப் படித்த பின்பா ஒரு போலி வேஷம் போட்டு ஊரை ஏமாற்றும் போலி சாமியார்கள் திருந்துவார்களா?

இரா. செல்வகுமார், ஓட்டேரி.

மெரினா முதல் மெரி வரை படித்ததில் பிணவறையின் பரிதாப நிலையை உணர்ந்தேன்.

இராஜோதி, சென்னை-48.

இளம் கவிஞர்களே எழுக! என அறைகூவல் விடும் அட்டை அவர்களின் சிந்தனையை மக்கள் மத்தியில் பற்ற வைக்கும், அதற்கு முன்மாதிரியாக இருக்குமென நம்புகிறேன்.

சோலை [illegible], ஜோலார்பேட்டை.


இரும்புச் சுவர்கள் பொழுதுபோக்குக்காகவும் - கிண்டலுக்காகவும் வாசக நெஞ்சங்களை மயங்கடிக்கும் மசாலா பத்திரிகைகளில் வெளிவரும் இருபக்கக் கதையை போலிருந்தது.

[illegible], கந்தபெருமாள் கோவில்.

மண்மங்கலம் பஞ்சாயத்துத் தலைவர் ஏலம் என்ற செய்தி தவறானது. அந்த ஊர் பள்ளிக்கூடத்துக்கு நன்கொடை அதிகமாக தந்தவர்களைத்தான் ஒருமனதாக தேர்ந்தெடுத்தனர்.

S. [illegible], [illegible].

FREE E - BOOKS , www.thamizham.net.,



ஒருவரைக் கொன்றவருக்கே
தூக்குத் தண்டனை.
நாளும் பலரைக்
கொல்லும் வறுமையை
ஏன்
கைது கூட செய்ய-
வில்லை?

○ கே. எஸ். பாரத் சந்தர்

அர்த்தமுள்ள அனுமானம்...

வம்பு செய்த
வாலிபரிடமிருந்து
இளம் பெண்ணை
காவலர்கள்
காப்பாற்றியதால்
அவள் கற்பிழந்தாள்
[illegible]

இறந்து போனவர்களுக்கு
உயிர்மீட்பு தந்து
வயதுக்கு வராதவர்களை
வாலிபர்களாக்கி
கைம் பெண்களுக்கு
மறுமணம் செய்வித்து-
ஆ...!
தேர்தல் வந்தால்
தேசமெங்கும்
எத்தனை எத்தனை
கடமைகளை
தலைவர்களும்
தொண்டர்களும்
செய்ய வேண்டியுள்ளது?

○ M. ஜெகதீசன்.

விலைவாசி

சிலுவை தூக்கிய
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

FREE E - BOOKS , www.thamizham.net.,

தீண்டாமை —
ஜவுளிக் கடையிலும்
தான்
இல்லா விட்டால்...
'கந்தலானாலும்
கசக்கிக் கட்டு'
ஆத்திச் சூடியை
அரிச்சுவடி —
முதல் பாடம்'
கற்பிப்போமா?

— சா. வான தீபன்.

வெட்கமாயிருக்கிறது!

பசியெடுக்கும் போதெல்லாம்
நான் உண்கிறேன்...

அவைகளும் தான்!

வெயில், மழை, காற்று
இவைகளிடமிருந்து
தப்பி ஓடுகிறேன்

அவைகளும் தான்!

இந்த அவைகளிடமிருந்து
வேறுபட முடியாத
போதெல்லாம்

வெட்கப்படுகிறேன்!

— [illegible]

பதவி ஏணியில்
ஏறிய பிறகு
அவன்
கழற்றி எறிந்தான் - தன்
கால்களை.

— க. பை. செந்தில்வேலு.

கன்னித்தீவு.
சிந்துபாத்
ஜனாதிபதிக்கு
கருணை மனு
போடுகிறான்
தினத்தந்தியிலிருந்து
தன்னை
விடுவிக்குமாறு!

— புவி. உமாசந்திரன்

நம்
மீசைப்
பொருளாதாரத்தை விட
எங்கள் நகங்கள்
வேகமாக வளர்கிறதே!


— [illegible]

FREE E - BOOKS , www.thamizham.net.,

பழைய உலகத்தின் ஏழு அதிசயங்களில் முதன்மையானதும், இன்றும் அழியாமலிருப்பதும் எகிப்திலுள்ள கீசா என்றவிடத்தின் பெரிய பிரமிடாகும். சுமார் 4500 ஆண்டு கட்கு முன்னால் கட்டப்பட்ட இதன் பிரமாண்டம் மட்டுமின்றி இதன் ஆற்றல் இன்றைய விஞ்ஞானிகளை அயர வைத்திருக்கிறது. மானிட வரலாற்றில் சமீப காலம்வரை இவ்வளவு பெரிய கட்டடம் பூமியில் எங்கும் எழுப்பப்பட்டதேயில்லை.

இதன் உயரம் சுமார் 450 அடி. இன் பரப்பு 14 ஏக்கர். 90 மில்லியன் கனஅடி கற்கள் இதில் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. அதாவது அமெரிக்காவின் மிகப்பெரிய எம்பயர் ஸ்டேட் கட்டடம் மாதிரி 30 கட்டடம் பிரமிடை வைத்துக் கட்டலாம். யேசுநாதர் பிறந்தது முதல் இந்நாள்வரை பிரிட்டிஷ் தீவில் கட்டப்பட்டுள்ள மொத்த தேவாலயங்களில் பயன்படுத்தப்பட்ட கற்களைவிட அதிகமான கற்கள் பிரமிடில் பயன்படுத்தப்பட்டுள்ளன

# நமது பிரமிட் மருத்துவம்




இன்னும் தெளிவாகச் சொல்வதானால் 48 மாடி கட்டடத்தைவிட உயரமான இந்த பெரிய பிரமிடைக் கொண்டு 3 அடி உயரமும் ஓரடி கனமும் உள்ள சுவர் எழுப்பினால் அது 5300 கல் நீளம் வளரும். மிகத் துல்லியமாக பிரமிடின் அடிப்பகுதி காந்தமுள் காட்டும் வடக்கை நோக்கிக் கொண்டிருக்கிறது. இதை விடப் பெரிய அதிசயம், உலகத்தின் மொத்த நிலப்பரப்பின் நட்டநடுமையத்தில் பிரமிட் அமைந்துள்ளது. 500 மைல்களுக்கு கற்களே இல்லாத பாலைச் சமவெளியில் 4500 ஆண்டுகளுக்கு முன்னால் இவ்வளவு விஞ்ஞான ரீதியாக திட்டமிட்டு இதைக் கட்டிய மூளை யாருடையது என்பது இன்றும் புரியாத புதிராகவே உள்ளது. வெளிக்கிரக மனிதர்களின் தொடர்பு இதில் இருந்ததாகவும் ஒரு சாரார் நம்புகின்றனர்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

பிரமிடின் மகத்துவம் அதன் பிரமாண்டத்தில் மட்டுமில்லை; அதன் நோய் தீர்க்கும் ஆற்றலிலும் உள்ளது. எகிப்திய பிரமிடின் வடிவை அப்படியே சிறியதாக்கி நாம் வீட்டில் தயாரித்து பல நோய்களை அதிசயத்தக்க விதமாக அப்படியே குணப்படுத்தலாம். உலகெங்கும் பிரமிடின் குணமாக்கும் தன்மை பற்றி ஆய்வு நடந்து வருகிறது. சோவியத்தின் லெனின்கிராடு பல்கலைக் கழகம், 'பிரமிட் ஆய்வுத்துறை' என்றொரு தனித்துறையையே நிறுவியுள்ளது.

**பிரமிட் ஒன்றை அட்டையில் நீங்களே உங்கள் வசதியான அளவிற்கேற்ப தயாரித்துக்கொள்ள மாதிரி வரைபடம் தரப்பட்டுள்ளது.**




- பிரமிடிற்குள் காய்கறி, பழம், மாமிசம் வைத்தால் பலநாட்கள் கெடுவதில்லை; பாக்டீரியாக்கள் பிரமிடில் வளர முடியாது.
- பழச்சாற்றில் உள்ள கசப்பு நீங்கும்; காபியின் கசப்பு குறையும்.
- சிறந்த அமைப்புள்ள பிரமிடிற்குள் வளர்க்கப்படும் தாவரங்கள் 150% அதிக வளர்ச்சி பெறும்
- வைட்டமின்களின் சக்தி அதிகரிக்கும்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

■ குழாய் நீரை ஒரு வாரம் இதற்குள் வைத்தால், அருவி நீரைப் போல புதுவெள்ளமாக சுவைக்கும்.

■ வீட்டுப்பிராணிகள் பிரமிடில் தூங்க மிகவும் ஆசைப்படும். ஈக்கள், பூச்சிகள் பிரமிடை வெறுத்து ஒதுக்கும்.

■ சின்னக்குழந்தைகளின் அடமும் முரட்டுத்தனமும் குறைந்து அமைதிப் படுவர்.

■ பிரமிடிற்குள் ஆழ்நிலை தியானம் செய்தால் சிந்தனைவேகம், விழிப் புணர்ச்சி புலன் உணர்வுகள் கூர்மை யாகும்.

■ புத்துணர்ச்சி ஏற்படும். கடும் ஒற்றை தலைவலி கூட பறக்கும்.

■ மழுங்கிய பிளேடுகளை உள்ளே வைத்தால் கூர்மையாகும்.

■ பிரமிடை தலைக்குமேலே வைத்து உறங்கினால் புத்துணர்வு ஏற்படும்.

■ தலைமுடி வேகமாக வளரும்.

■ வலிகள், இரத்தக்கசிவு, கண் பார்வை, காதுமந்தம் குணமாகும்.

• சிந்தனை •

அடுத்து நமது ஊக்க மருத்துவம்

# மதிப்பீடு...



-நாகை.பொன்னி

"சார்... ஏழரை மணிக்கு எங்களுக்கு அப்பாயின்ட்மென்ட் கொடுத்திருக்கும்போது... எப்படி சார் அவர் வெளியே போவார்?"

"இன்னமட்டும் உங்களோட வருகைக்காகத்தான் காத்திட்டு இருந்தார்... இப்பதான் ஒரு அஞ்சு நிமிஷத்துக்கு முன்னால புறப்பட்டு போனார்... ஒரு பட்டி மன்றத்துக்கு தலைமை வகிக் கிறதுக்காக...!"

"சார்... 'எழுத்தாளர் வனிதாசேதுராமனோட இலக்கிய

FREE E - BOOKS , www.thamizham.net.,

பேட்டி அடுத்த வாரம்'னு பத்திரிகையில விளம்பரம் கொடுத்துட்டோமே...! இப்ப என்ன பண்றது... திரும்ப அவரை எப்ப சந்திக்கலாம்?"

"இன்னும் ரெண்டு நாளைக்கு நீங்க அவரை சந்திக்க முடியாது... நாளைக்கு பாரதிராஜாவோட ஒரு ஸ்டோரி டிஸ்கஷன்ல கலந்துக்கிறார். நாளன்னைக்கு ஒரு அரசியல் கூட்டத்துல..."

"சரி சார்... பரவாயில்லை எங்க பத்திரிகை ஆசிரியரை கலந்துகிட்டு போன் பண்றேன்... அவர் வந்தால் சொல்லிடுங்கோ..."

ஏமாற்றத்துடன் வெளியே வந்து – செருப்பிற்குள் கால்களை நுழைத்தேன். உள் பக்கமிருந்து... அந்த – அந்த லலிதா சேதுராமனின் குரல் சன்னமாய் ஒலித்தது.

"போய்ட்டாங்க ஸார்... ஆமாம், நீ இப்படி அறைக்குள்ளே இருந்துகிட்டே இவ்வளவு அழகா என்னை பதில் சொல்லச் சொன்னீங்க..." – பி.ஏ. வினவினார்.

"ஒரு எழுத்தாளனை உருவாக்கிறதும் அழிக்கிறதும் இந்த பத்திரிகைகாரங்கதான். சமீபத்துல பத்திரிகையில என்னோட ஆர்டிகல்ஸ் எதுவும் சரியா பிரசுரம் ஆகல. அப்படி இருந்தாலும் இவங்க மத்தியில நாம எப்பவுமே பிஸியா இருப்பதா காட்டிக்கணும்... அப்பதான் மதிப்பு குறையாம இருக்கும்..."

FREE E - BOOKS , www.thamizham.net.,


# மீனவர்கள் 3

'சுபவீ'

"வழி தெரியாமல், புது இடத்தில் கடலுக்குள் போய்ச் சாவதற்குத் தயாராயில்லை." என்று சொன்னவர்களுக்கு கரையிலேயே சாவு காத்திருந்தது.

அமைச்சர்களோடு நடத்திய பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்து, என்ன செய்வதென்று புரியாமல் தவித்துக் கொண்டிருக்கையில் 03-12-85 அன்று சில பில் கலெக்டர்கள் அயோத்தியா குப்பத்திற்கு வந்து வாடகை கேட்டிருக்கின்றனர்.

குப்புறத் தள்ளியதோடு விடாமல், குதிரை குழியும் பறித்த கதையை அவர்கள் நேரில் பார்த்தனர். அன்பு என்கிற பதினெட்டு வயதுப் பையன் நியாயம் கேட்கக் குரல் கொடுத்தான்.



அந்தப் பையனைத் தனியாய் அழைத்துப் போய், அன்று மாலை அவர்கள் 'நியாயம்' கொடுத்தார்கள். அவன் உடம்பு முழுவதும் ரத்தத்தால் நியாயம் எழுதப்பட்டது.

**அடுத்த நாள் காலை...**

மக்கள் திரண்டனர். குடிசை மாற்று வாரியத் தலைவர் திரு. செல்வம் சொன்ன பதில்கள் மீனவர்களை மேலும் கோபப்படுத்த-

தடியடி

கலவரம்

துப்பாக்கிச் சூடு!



கடைசியாய் ஆறு பிணங்கள்!

துக்ளக் பத்திரிகை தலையங்கம் எழுதியது:

"போலீஸ் செய்தது சரிதான். கலவரம் வரும்போது போலீஸ்காரர்கள் சுடாமல் என்ன செய்ய முடியும்?" என்று!

FREE E - BOOKS , www.thamizham.net.,

கலவரம் நடந்த இடத்தில் மட்டும் போலீஸ் சுடவில்லை என்பது இன்னொரு (மறைக்கப்பட்ட) விஷயம். ஏறத்தாழ 11 மணிக்கு நடுக் குப்பத்திற்குள் நுழைந்த போலீஸ், கண்ணில் பட்டவர்களையெல்லாம் பந்தாடியிருக்கிறது. காய்கறி விற்றவர்கள், மீன் விற்றுக் கொண்டிருந்தவர்கள், வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த மீனவர் அல்லாத சிலர்... இப்படிப் பலரும் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

அப்பாவி மக்களைத் தாக்குவதில், சிங்கள ராணுவத்திற்கு நாம் எந்த வகையிலும் சளைத்தவர்கள் இல்லை என்று நிரூபிக்கப்பட்டது. இறந்து போன மீனவர்களின் சவ ஊர்வலத்திலும் தடியடி நடந்தது.



துக்ளக் போன்ற பத்திரிகைகள் எல்லாவற்றையும் நியாயப்படுத்த முயற்சிக்கலாம். ஆனாலும், அடக்குமுறைக்கு எதிராக மக்கள் ஒன்று திரள்வது நடந்தே தீரும்!

அரசாங்கம் செய்தது அனைத்தும் தவறென்று புது தில்லியில் உள்ள உச்சநீதி மன்றம் தீர்ப்புச் சொன்னது.

ஆனாலும் என்ன பயன்?

உடைந்து போன கட்டுமரங்களும், கிழிந்து போன வலைகளும் தான் திரும்பி வந்தன.

அவர்கள் இழந்து போன வாழ்க்கை, இன்னமும் வராமல் பாக்கியாய் இருக்கிறது. (-தொடரும்)

# மெரீனா முதல் குமரி வரை

FREE E - BOOKS , www.thamizham.net.,

# சுட்டியின் கேள்விகளுக்கு

உலகம் ஒரு நாடாகும் சாத்தியம் அடுத்த நூற்றாண்டில் உண்டா? ஒரே உலகம் நம் துயரங்கள் பலவற்றைத் துடைக்கும் என்று நம்புகிறீர்களா?

உலகம் ஒரு நாடாவது ஒரு கவித்துவக் கனவு. அதற்கான சாத்தியம் இல்லை என்றும், அதற்கான முயற்சிகளை மேற்கொள்வது நல்லது அல்ல என்றும் நினைக்கிறேன். பரிணாமமும் சரித்திரமும் 'மனித ராசிக்குப் பல பொதுத் தன்மைகளை உருவாக்கி இருக்கின்றன என்பது உண்மைதான். ஆனால் இவற்றை மட்டுமேட்டுமே பார்ப்பது விவேகம் அல்ல. ஒற்றுமையில்ல வேற்றுமைகளையும் பார்ப்போம்.

கடவுள்கள், கலைகள், மொழிகள், கலாச்சாரங்கள், சமூகவாழ்வுகள் இவை இனங்கள் சார்ந்தும், நாடுகள் சார்ந்தும் வேறுபடுகின்றன. இந்த வேற்றுமைகளுக்கு சமத்துவ நியாயம் செலுத்தும் ஒரே அரசை அமைப்பது, வரும் நூற்றாண்டில் நடைமுறை சாத்தியமாக இராது. ஒரே உலகம் நம் துயரங்களை அதிகப்படுத்தவும் கூடும்.

# சுந்தர ராமசாமியின் பதில்கள்!

FREE E - BOOKS , www.thamizham.net.,

மனிதன் மற்றொரு மனிதனிடம் - மதம், மொழி, கலாச்சாரம் சார்ந்து அவன் வேறுபட்டிருக்கும் நிலையிலும் - பரிசயப்படவும், உறவு கொள்ளவும், பகிர்ந்து கொள்ளவுமே விரும்புகிறான். பரஸ்பரம் புரிந்து கொள்வதற்கான ஆர்வங்களும் அக்கறைகளும் மாறுபட்ட கலாச்சாரங்களைச் சேர்ந்தவர்களுக்கு முனைப்பானவை. இந்த அம்சங்கள் வளர்க்கப் படவேண்டும். ஒரு இனம் மற்றொரு இனத்தையும், ஒரு சமூகம் மற்றொரு சமூகத்தையும், ஒரு கலாச்சாரம் மற்றொரு கலாச்சாரத்தையும் அறிவு பூர்வமாகவும், அழகியல் சார்ந்தும் புரிந்து கொள்ளச் சந்தர்ப்பங்களும், வசதிகளும் உருவாக்கப் படவேண்டும்.

மனித ராசிகளின் அடிப்படை ஒற்றுமைகளைப் புரிந்து கொண்டு, இனங்கள் - கலாச்சாரங்கள் சார்ந்த வேற்றுமைகளுக்கு மதிப்புத் தந்து, பிரிந்து, நல்லுறவுடன் வாழ்வதே விவேகமானது.

பேராசிரியர் மா. இளஞ்செழியன் - வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகள் - விவரங்களுக்கு - 'குறளகம்', 50, என். எஸ். கிருஷ்ணன் சாலை, கோடம்பாக்கம், சென்னை - 600 024.

யாகப்பசுக்கள் - குறுநாவல்கள் (11-00) - இந்திரா சௌந்தரராஜன் - M/s அபிராமி பப்ளிகேஷன்ஸ், 307 லிங்கிச்செட்டித் தெரு, சென்னை - 600 001.

பாடுபாப்பா - குழந்தைக் கவிதைகள் (4-00) - நாராநாச்சியப்பன் - M/s தமிழாலயம் 137, ஜானிஜான்கான் தெரு, சென்னை - 14.

FREE E - BOOKS , www.thamizham.net.,

‘உலகத்தில் உள்ள அழகான பெண்களின் ஆட்டோகிராப் நோட்டுகளில் என் கையெழுத்து இருக்க வேண்டும்’ இப்படி ஒருவர் விருப்பம் தெரிவித்து இருக்கிறார். இந்த ஆசை இவருக்கு எப்படி வந்தது? எல்லாம் புகழ் வேட்கையின் உச்சக்கட்டத்தால்தான்.

இப்போது பலரும் தமது ஆட்டோகிராப் நோட்டை பாடநூல்களைவிடவும் பத்திரப் படுத்துகிறார்கள். ஒரு கையொப்பத்தை சம்பாதிப்பதற்குள், மானம் மரியாதையையும் இழக்கச் சம்மதிக்கிறார்கள்.

பல நடிகர்களும், தலைவர்களும் ஆட்டோகிராப் படையெடுப்பை அலட்சியப்படுத்து கிறார்கள். மேடையிலேயே இந்த தொல்லை கோபப்பட்டுத் திட்டியதை நான் பார்த்திருக்கிறேன். இதனை பெருமையாகக் கொள்பவர்களும் உள்ளார்கள். திட்டியது தலைவனல்லவா?

இவையன்றி, ரசிகப் பேர்களும் உண்டு. இந்த வேறுவகையினர் பிரபலமானவர்களின் முகவரிக்கு கையெழுத்திடப்பட்ட போட்டோ கேட்டு விண்ணப்பிப்பார்கள். விலாசங்களுக்காக இவர்கள் இப்போது அலையத் தேவையில்லை. மணிமேகலை பிரசுரம் முகவரிகளையே புத்தகமாகப் போட்டு இவர்களை ஆசுவசித்துள்ளது.

நாம் புகழடைய வேண்டும் என்ற வெறியும், முடியவில்லையே என்ற ஆதங்கமும் தான் இந்தச் செயலைச் செய்யத் தூண்டுகிறது.

ஆட்டோகிராப் ஆசையை அகற்ற வேண்டுமானால் இவர்களின் உள்ளே உறைந்திருக்கும் தலைமை வழிபாட்டுத் தன்மையை (HERO WORSHIP) தகர்க்க வேண்டும்.

• நா. தென்னிலவன்

# கையெழுத்து வேட்கை...

FREE E - BOOKS , www.thamizham.net.,


புத்தகப் பிழிவு

# மூன்றாவது அலை

ஆசிரியர் : ஆல்வின் டாஃலர்.

வெளியீடு : PAN BOOK LTD

பக்கங்கள் : 544 இந்தியாவில் விலை ரூ 44-50




நம் வாழ்வில் புதிய நாகரிகம் ஒன்று உருவாகிக்கொண்டிருக்கிறது. ஆனால் உலகெங்கும் உள்ள கருத்துக் குருடர்கள் சிலர் வீணே அதனை தடுத்து நிறுத்த முயல்கிறார்கள்.

இந்த புதிய நாகரிகத்தின் - இந்த மூன்றாவது அலையின் விடியற்றான் நம் தலைமுறையின் மகத்தான பரபரப்பான உண்மையாகும். ஆயிரக்கணக்கான ஆண்டுகள் விவசாயப் புரட்சி முதல் அலையாக பூலோகத்தில் நிறைந்தது; பின் 300 ஆண்டுகளுக்கு முன் தொழில்புரட்சி இரண்டாவது அலையாக உலகை மாற்றியமைத்தது.

அடுத்து 3வது அலையோ அதற்குள் பிறந்துவிட்டது. இது வெகுவிரைவில் சில பத்தாண்டுகளில் தன் வேலையை செய்துமுடிக்கும். இந்த அலை, பொருளாதாரத் திட்டத்தில் தன்னளவிலான தன்னாட்சியை உருவாக்கிக் காட்டும். அதிகார வர்க்கத்தை வீழ்த்தும். எளிமையான அரசை அமைக்கும். அதனை தீவிரமாகச் செயல்பட வைக்கும். வாங்குவோர்க்கும், உற்பத்தி செய்வோர்க்கும் இடையே எழும் பல்வேறு நடைமுறைச் சிக்கல்களைத் தீர்த்துவைக்கும்.

எதிர்காலமே நிகழ்காலத்தை இயக்குகிறது என்று எதிர்பார்க்கும் சிலரின் பார்வையை முற்றிலும் மாற்றிக் காட்டுகிறது மூன்றாம் கட்ட அலை. புரட்சித்திட்டங்கள் பலவற்றை வகுத்து ஒரு நுட்பமான போக்கைத் தலைமுறைகளிடையே தீர்த்துவைக்கும் சக்தி மிக்க முன்னணி அலை ஒன்று உருவாக்கப்பட்டுப் புதிய சமுதாயத்தை உருவாக்கிக் காட்டும்.

• குருநாதன் •

FREE E - BOOKS , www.thamizham.net.,

வண்டலூருக்குப் பக்கத்திலேயே இருக்கும் மண்ணிவாக்கம் நடுநிலைப் பள்ளியின் வகுப்பு ஆசிரியர் ஒருவர் மிட்டாய் போன்ற தின்பண்டங்களை மாணவர்களிடமே விற்கும் செயல் வேதனை அளிக்கிறது. அப்பள்ளி வாசலில் கடைகளே கிடையாது! எனவே, ஆசிரியரே விற்பனையில் இறங்கி விட்டார். காசில்லாத மாணவர்களுக்கு கடன் வேறு கொடுக்கிறார்.

இதனால் மாணவர்கள் உடல்நிலை மட்டுமல்லாது மனநிலையும் மோசமடைகிறது.

— ஜெயந்தி, ஓட்டேரி விரிவு
வண்டலூர், சென்னை-48.

ஜெயமணி. இவர் ஜப்பானின் டோக்கியோவில் வேலைபார்த்து, சினிமாத்துறையில் சில காலம் தங்கி தற்போது சொந்தமாக 'திரை சித்ரா' என்ற பத்திரிகையை நடத்தி வருகிறார்.

முதல்வர் எம்.ஜி.ஆர் ஒரு காலத்தில் ஆபாச தடைச்சட்டம் கொண்டு வந்தார். அது நியாயமாகச் செயல்பட்டால் முதலில் கம்பி எண்ண வேண்டியவர் இவர்தான்.

திரைச்சித்ரா மார்ச் இதழில் இவர் ஒரு அறிவிப்பு செய்துள்ளார். தமிழகம் முழுவதும் உள்ள 'விலைமாதர்' விலாசங்களை இலவச இணைப்பாக வெளியிட உள்ளாராம். எவ்வளவு கேவலம். இதனை தட்டிக் கேட்க யாருமே இல்லையா?

— எஸ்.ஏ. சுகுமாரன்
முத்துகிருஷ்ணாபுரம் 2ஆம் தெரு, தூத்துக்குடி

FREE E - BOOKS , www.thamizham.net.,

# இன்றும் இதே நிலை!

சினிமாவில் ஆபாசக் காட்சிகள் மலிந்துவிடக் கின்றன என்பதைத் திடீரென்று இப்பொழுது 'சென்ஸார்' என்ற திருக்கூட்டத்தார் உணர்ந்து விட்டார்கள்! ஆபாசங்களைப் பார்த்து, களித்து, சலித்துவிட்டார்கள் என்று கூடக் கூறலாம்.

தமிழ்ப் படங்களில் அரை நிர்வாணக் காட்சிகள், பச்சையாக, கொச்சையாக, விரசமான காதல் சம்பாஷணைகள்-இவைகள் 'சென்ஸார்' அவர்களது அனுமதிபெற்றே காட்டப்படுகின்றன. அறிவாளிகள் தமிழ்ப்படமென்றால் கேவலமாகக் கருதுகிறார்கள். கிழவர்கள் 'மனிதனின் மேன்மையான உணர்ச்சிகள் பாழாக்கப்படுகின்றனவே' என்று வருத்தங் கொள்ளுகின்றனர். யௌவன ஸ்திரீ புருஷர்கள் ஆபாஸங்களைப் பார்ப்பதற்கே சென்று விட்டுக் குறை கூறுகின்றனர். பத்திரிகைத் தொழில் நடத்துபவர்களும் நேர்மையான முறையில், உள்ளது உள்ளபடி விமர்சனம் செய்வதில்லை. ஆபாசப் படங்களுக்கு வருவாய் மிகுகிறது என்பதை ஆதாரமாகக் கொண்டு பட முதலாளிகள் ஆபாஸங்களை அதிகமாக்குகிறார்கள். மேல் நாடுகளில் சினிமா சிறந்த அறிவு வளர்ச்சி சாதனமாக விளங்குகின்றது. இங்கு மக்களை அறிவிலிகளாக்க சினிமா உதவுகிறது.

இப்படிப்பட்ட வெட்கக்கேடான நிலைமையைச் சீர்திருத்த 'சென்ஸாரும்' தூக்கத்திலிருந்து விழிப்படைந்து சில அரிய சீர்திருத்தக் கோட்பாடுகளை வெளியிட்டுள்ளார்கள்.

மிருக வெறியை எழுப்பும் காட்சிகள் கூடாது.

அரை நிர்வாணமாகவோ, அல்லது முழு நிர்வாணமாகவோ ஆட்டம் கூடாது.

காம விகாரம் உண்டுபண்ணக் கூடிய விதமாய் அங்கங்களைக் காட்டக்கூடாது.

சமூகத்தையோ, மதத்தையோ அல்லது அவைகளின் பழக்க வழக்கங்களையோ பழிக்கும் விதத்தில் காட்சிகள் இருத்தல் கூடாது.

கடவுள் நிந்தனை கூடாது.

கொள்ளை, கொலை முதலிய கொடூரக் காட்சிகள் அளவுக்கு மீறி, தீய உணர்ச்சிகள் எழுப்பும் வண்ணம் இருத்தல் கூடாது.

இப்பொழுதாவது தம் கடமையைச் செய்ய முன்வந்த 'சினிமா சென்ஸார்' அவர்களைப் பாராட்டுவோம்!

1947 செப்டம்பர் காவேரி மாத இதழிலிருந்து

— கதிரவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# கம்ப்யூட்டர்கள் நொறுங்குகின்றன

போலி தயாரிப்புகளுக்கு எதிராக போர் தொடுத்திருக்கும் தைவான் கள்ளத்தனமாக தயாரிக்கப்பட்ட 8 ஆயிரம் கம்ப்யூட்டர்களை ரோட்டு ரோலரைக் கொண்டு சாலையில் போட்டு நொறுக்கியது.

கள்ளத்தனமாக தயாரிக்கப்படும் கம்ப்யூட்டர்களை வாங்கித்தர உதவுபவர்களுக்கு சம்பந்தப்பட்ட ஒரு நிறுவனம் கமிஷன் தந்தது.






ஆசிரியர்: கி. நாராயண பாரதி · வெளியிடுபவர்: கி. ராமச்சந்திரன்
1494 - அண்ணா நகர் (13-வது மெயின் ரோடு) சென்னை - 600040.
அச்சிட்டோர்: மெ. எம். ரவீந்திரன், ரவீந்திரன் பிரஸ்,
131 டாக்டர் பெசன்ட் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.

FREE E - BOOKS , www.thamizham.net.,

வெளிவந்திருக்கிறது..

பொற்காலத்தைத் தேடும் புதை பொருள் ஆராய்ச்சியினைக் கைவிட்டு - நிகழ் காலத்தை நினைக்கத் தூண்டும்

கவிஞர் இரா. மயில்சாமியின்

"தூரத்துரசிகன்" புதுக் கவிதை நூல்



விலை ரூ. 6/-

கனி முத்துப் பதிப்பகம் • 727 அண்ணா சாலை, அம்பாள் பில்டிங், சென்னை - 6.



விவசாய நண்பர்களை அன்புடன் அழைக்கிறது...!

தரமான உரங்கள், திறனுள்ள விதைகள், பூச்சிமருந்துகள் வாங்கிட சிறந்த இடம்

**லெட்சுமி எண்டர்பிரைசஸ்**

ரயில்வே ரோடு, பாபநாசம் (B.O)
3-71, அண்ணா சாலை, பட்டீஸ்வரம் (H.O.)
தஞ்சை மாவட்டம்.

**வேல் டைப் பௌண்ட்ரி**

- புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
- எல்லா மொழி அச்செழுத்துக்கள்
- போஸ்டர் எழுத்துக்கள்
- எல்லா வித அச்சக உபகரணங்கள்

38, கட்டி தெரு, பெருமாள் பேட்டை, சென்னை-7. பேசி: 37693

"இளம் விழியல்" கவிதை தொகுதி நூலில் பங்கு கொள்ள விரும்பும் இளம் படைப்பாளிகள், விபரங்களுக்கு 30 காசுகள் தபால் தலையுடன் விண்ணப்பிக்கவும்.


**S.A. சுகுமாரன்**
(தொகுப்பாசிரியர்)

109.E, முத்துக் கிருஷ்ணா புரம், 2-ம் தெரு, தூத்துக்குடி-628001.


FREE E - BOOKS , www.thamizham.net.,

சிட்டு: மாத இதழ் | ஏப்ரல் 1986 Regd. No. TN/MS(N)/317
Licensed to post without prepayment Licence No. [illegible]

http://www.thamizham.net FREE E - BOOKS (TAMIL)




# Sakthi Sugars Limited

## A PACE SETTER for RURAL PROSPERITY

SAKTHI SUGARS has engineered a breakthrough in sugercan production with innovative technology and the farmers have achieve a successive increase in yield of sugarcane to 45 tonnes from 28 tonne to earn an additional income of Rs. 3,000/-Per acre.

SAKTHI SUGARS has enriched the springs of rural life by distribut ing over Rs. 20 crores as sugarcane price annually to over ten thousand farmers (a bulk of Whom are small and marginal farmers) and generating gainful rural employment to over fifty thousand families in the primary, secondary and tertiaray sectors.

SAKTHI SUGARS has promoted a number of rural development pro grammes (I) Sakthi High School Provides a conducive environment for study and development of rural children. (II) Sakthi Institute of Techno logy promotes the technical skill of the youth, and (III) V. M. Kailasam Hospital provides medical care for the region.

Head Office:
73-A, Race Course Road,
Coimbatore-641 018.

Reg. Office & Factory:
Sakthinagar-638 315.
Periyar District.


FREE E - BOOKS, www.thamizham.net.,